**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 70/2024**

2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய சுந்தரி **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 27.11.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சுந்தரி | | |
| Father /Husband Name | : | லெட்சுமணன் | Court | : |
| Village | : | நல்லாடை | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 57/2025 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 07.06.1986 | வாதியின் கணவர் லெட்சுமணன் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 09.06.1986 | வாதியின் கணவர் லெட்சுமணன் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3. | 19.11.1986 | வாதியின் கணவர் லெட்சுமணன் கிரயம் பெற்ற கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 18.12.2007 | லெட்சுமணன் எழுதிவைத்த உயில் ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 29.04.2023 | லெட்சுமணனின் வாரிசு சான்றிதழின் கணினி நகல் **வாசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 6 | 07.08.2023 | வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **வாசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 7 | 14.08.2023 | மேற்படி அறிவிப்பை 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை **வாசாஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8 | -- | மேற்படி அறிவிப்பை 8ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புதல் அஞ்சல் அட்டை **வாசாஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 9 | 23.08.2023 | 1 முதல் 8 பிரதிவாதிகள் கொடுத்த பதில் அறிவிப்பின் அசல் **வாசாஆ 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 10 | 31.05.2023 | வாதி 1, 8 பிரதிவாதிகள் பெயரில் தாக்கல் செய்த கேவியட் மனுவின் அலுவலக நகல் **வாசாஆ 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.